மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் நாள் புதன்கிழமை

R.E.A.No: 07/2020
in
R.E.A.No: 02/2019
in
R.E.P.No: 16/2015
in
O.S.No: 75/2001

1. பழனியப்பன் (இறந்துவிட்டார்)
2. சின்னதாயி
3. பழனியப்பன்
4. செல்லகண்ணு
5. சித்தையன்
6. பழனியம்மாள்
7. மாதையன்
8. மாரிமுத்து . . . மனுதாரர்கள்/மனுதாரர்கள்

/எதிராக/

1. மாரியண்ணன்
2. பழனிப்பன் (இறந்துவிட்டார்)
3. முத்து
4. பெரியண்ணன்
5. தாண்டவன்
6. மாதையன்
7. மாரியப்பன் (இறந்துவிட்டார்)
8. மோகன்
9. அண்ணாமலை
10. செல்லம்மாள்
11. செல்வராஜ்
12. மாரியம்மாள்
13. பார்வதி
14. பழனிகவுண்டர்
15. வெங்கடாசலம்
16. மாராக்காள்
17. பழனியம்மாள்
18. பெரியம்மாள்
19. பூங்கொடி . . . எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்

20. மாரியம்மாள்
21. தாண்டவன்
22. கோவிந்தம்மாள் . . . எதிர்மனுதாரர்கள்/உத்தேச தரப்பினர்கள்

இம்மனு கடந்த 12.02.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், 1, 3 முதல் 6, 8, 10 முதல் 12 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.ஜி.எஸ்.சாமிசின்னபிள்ளை அவர்கள் ஆஜராகியும், 2, 7, 14 ம்எதிர்மனுதாரர்கள் இறந்தவர்களாக்கப்பட்டும், 9, 13, 15 முதல் 19 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், 20 முதல் 22 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.பி.சுவாமிநாதன் அவர்கள் ஆஜராகியும், 20 முதல் 22 ம் எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினர்களாக்கப்பட்டும், இது நாள்வரை எமது ஆய்வில் இருந்து வந்த மேற்படி மனுவினை பரிசீலனையில் எடுத்துக் கொண்டு இருதரப்பு சான்றாவணங்கள், சாட்சியங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 50 மற்றும் பிரிவு 151–ன் கீழ் 14 ம்எதிர்மனுதாரரின் வாரிசுகளான 20 முதல் 22 எதிர்மனுதாரர்களை R.E.A.No.02/2019 ல் சேர்க்க தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

### 1) மனுவின் சுருக்கம்

நிறைவேற்று மனுவில் 14 ம்எதிர்மனுதாரரான பழனிகவுண்டர் 17.06.2020 ல் இறந்துவிட்டார். எனவே 14 ம்எதிர்மனுதாரரின் வாரிசுகளான உத்தேசதரப்பினர்களை R.E.A.No.02/2019 ல் 20 முதல் 22 எதிர்மனுதாரர்களாக சேர்க்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளார்கள்.

### 2) 9 ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 13, 15 முதல் 19, 1, 3 முதல் 6, 8, 10 முதல் 12 ம் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் (R.E.A.06/2020 ன் எதிருரை குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் எதிருரையாக

ஏற்றுக்கொள்ளப்படுகிறது)

14ம் எதிர்மனுதாரரின் தாயார் பார்வதி, மனைவி மாரியம்மாள், மகன் தாண்டவன், மகள் கோவிந்தம்மாள் ஆகியோர்கள் இறந்துபோன 14ம்எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வ வாரிசுகளாக உள்ள நிலையில் இறந்த 14ம்எதிர்மனுதாரரின் தாயார் பார்வதியை மனுதாரர்கள் வாரிசாக சேர்க்காமல் அதுபற்றி பிரமாணப்பத்திரிக்கையிலும், மனுவிலும் எந்த சங்கதியும் குறிப்பிடாமல் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 3முதல் 6, 8முதல் 12, 13, 15 முதல் 19ம் எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் நிறைவேற்று மனுவில் 14ம்எதிர்மனுதாரரான பழனிகவுண்டர் 17.06.2020ல் இறந்துவிட்டார் எனவும், எனவே 14ம்எதிர்மனுதாரரின் வாரிசுகளான உத்தேசதரப்பினர்களை R.E.A.No.02/2019ல் 20 முதல் 22 எதிர்மனுதாரர்களாக சேர்க்க உத்தரவிட கோரி மனுதாரர்கள் மனு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1, 3முதல் 6, 8முதல் 12, 13, 15 முதல் 19ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் 14ம் எதிர்மனுதாரரின் தாயார் பார்வதி, மனைவி மாரியம்மாள், மகன் தாண்டவன், மகள் கோவிந்தம்மாள் ஆகியோர்கள் இறந்துபோன 14ம்எதிர்மனுதாரரின் சட்டப்பூர்வ

வாரிசுகளாக உள்ள நிலையில் இறந்த 14ம்எதிர்மனுதாரரின் தாயார் பார்வதியை மனுதாரர்கள் வாரிசாக சேர்க்காமல் அதுபற்றி பிரமாணப்பத்திரிக்கையிலும், மனுவிலும் எந்த சங்கதியும் குறிப்பிடாமல் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு நிலைக்கத்தக்கதல்ல எனவும், எனவே மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 3 முதல் 6, 8 முதல் 12, 13, 15 முதல் 19 ம் எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) இருதரப்பிலும் உத்தேச எதிர்மனுதாரர்கள் இறந்துபோன 14 ம் எதிர்மனுதாரரான பழனிகவுண்டரின் வாரிசுகள் என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர். இந்நிலையில் 1, 3 முதல் 6, 8 முதல் 12, 13, 15 முதல் 19 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி பழனிகவுண்டரின் மனைவியை சேர்க்கவில்லை என்பதால் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என கட்சி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி எதிர்மனுதாரர்கள் உட்பட அனைத்து எதிர்மனுதாரர்களும் இந்த நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.75/2001 க்கு எதிராக 2 வது மேல்முறையீட்டு வழக்கு எண்.1511/2007 ஐ தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது. அதில் இறந்துபோன இந்த 14 ம் எதிர்மனுதாரர் பழனிகவுண்டரின் வாரிசுகள் என உத்தேச எதிர்மனுதாரர்களை மட்டும் குறிப்பிட்டு, மேற்படி 2 வது மேல்முறையீடு விசாரிக்கப்பட்டு, முழு விசாரணைக்கு பின்னிட்டு கடந்த 10.12.2020 ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே எதிர்மனுதாரர்கள் தரப்பிலேயே 14 ம்எதிர்மனுதாரரின் மனைவி என கூறும் பார்வதியை சேர்க்காமல் 2 ம் மேல்முறையீட்டை நடத்தி முடித்துவிட்டு, தற்போது R.E.A.No.02/2019 ல் மட்டும் சேர்க்க வேண்டும் என கூறுவது ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இந்நிலையில் அசல் நிறைவேற்று மனுவானது செயலுறுத்துக் கட்டளை பரிகாரத்தை நிறைவேற்ற தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் உத்தேச தரப்பினர்களை மட்டும் சேர்ப்பது போதுமானது என முடிவு செய்து, இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.